# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 9633/SCIC/2024**

Thiru.M.A.Yusuf Ansary S/o.K.M.Abdul Wahab - மேல்முறையீட்டாளர்
No.37/80, Fifth Main Road
C.I.T. Nagar, NANDANAM
CHENNAI - 600 035. கைபேசி.9884491921

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வருவாய் அலுவலர்
எண்.117, N.S.K. சாலை
மண்டலம் - 10, கோடம்பாக்கம்
சென்னை-600 024.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **12.03.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 05.04.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 18.04.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 25.05.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 29.03.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12/03/2024 நாளிட்ட மனுவை The Public Information Officer, Greater Chennai Corporation, Rippon Building, Chennai-3 அவர்களுக்கு அனுப்பி, அதில் "Copy of the Application for transfer of name in the Assessment filed by M.A.Nagoor Meeran." என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.M.A.யூசுஃப் அன்சாரி அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.A.தனசேகரன், முதுநிலை வருவாய் அலுலர், மண்டலம்-10, வருவாய் துறை,

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு ஏற்கனவே 05/04/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பி, அதில் மனுதாரர் கோரிய தகவல்கள்/ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனது தந்தையாரின் சொத்தினை சட்டத்திற்கு புறம்பாக திரு.நாகூர் மீரான் என்பவர் ஆக்கிரமித்துள்ளதாகவும், அது தொடர்பாகவே தான் தகவல்களைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். இன்றைய விசாரணையின் போதும் பொதுத் தகவல் அலுவலர் ஏற்கனவே குறிப்பிட்டவாறு தகவல்கள்/ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை என்பதையே வலியுறுத்தினார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / முதுநிலை வருவாய் அலுலர், மண்டலம்-10, வருவாய் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், சென்னை அவர்கள் மேற்சொன்னவாறான தகவல்கள்/ ஆவணங்கள் பராமரிப்பில் இல்லை என்பதை தெரிவிக்கும் வகையில் பிரமாணப் பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை மனுதாரருக்கு 31/07/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகல் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

3. **மேலும், மனுதாரர், 22/07/2026 அன்று பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு காலை 11.00 மணிக்கு, தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு சென்று, பொதுத் தகவல் அலுவலர்/ முதுநிலை வருவாய் அலுவலர் அவர்களிடம் அளிக்க வேண்டுமென்றும், முதுநிலை வருவாய் அலுவலர் அவர்கள், கோப்பினை மறு உருவாக்கம் செய்வதோடு, மனுதாரர் கோரும், அன்னாரின் சட்டப்பிரிவு 6(1)-ல் கோரியதற்கு தொடர்பான அனைத்து தகவல்களையும் மேற்சொன்னவாறு 31/07/2026-க்குள் அனுப்பி வைப்பதோடு, நிறைவேற்றுகை அறிக்கையினை 07/08/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையத்தால், பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 9633/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வருவாய் அலுவலர்
எண்.117, N.S.K. சாலை
மண்டலம் - 10, கோடம்பாக்கம்
சென்னை-600 024.

<u>மேல்முறையீட்டாளர்</u>

Thiru.M.A.Yusuf Ansary S/o.K.M.Abdul Wahab
No.37/80, Fifth Main Road
C.I.T. Nagar, NANDANAM
CHENNAI - 600 035.கைபேசி.9884491921.

RG/Sr.PC